10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 196 புதன்கிழமை டிசெம்பர் 06 2017 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48



## வடக்கு, கிழக்கில் 100 கி.மீ வேகத்தில் காற்று!

கொழும்பு, டிசெ.06

இலங்கையில் ஏற்படவுள்ள காலநிலை மாற்றம் தொடர்பில் வளிமண்டவியல் திணைக்களம் நேற்று செவ்வாய்க்கிழமை எச்சரிக்கை விடுத்துள்ளது.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள காற்றழுத்தம் தாழமுக்கமாக விருத்தி அடைந்து வருவதால், இலங்கையில் பாதிப்பு ஏற்படுமென அறிவுறுத்தப்பட்டது.

06

## இடரை எதிர்கொள்ளல் அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 06

காலநிலை அனர்த்தம் ஏற்பட்டால் அதனை எப்படி எதிர்கொள்வது என்பது தொடர்பில் யாழ். மாவட்ட அதிகாரிகள் நேற்றுக் கூடி ஆராய்ந்தனர். இதேபோன்று கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் அதிகாரிகள் கூடி ஆராய்ந்தனர்.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் காலநிலை அனர்த்தம் ஏற்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதையடுத்து பொதுமக்களின் பாதுகாப்பு, அவசர நிலைமைகளை எதிர்கொள்ளல் என்பன

06

## கூட்டுறவுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு ஆதரவு இல்லை!

### சீ.வீ.கே. கிடுக்கிப்பிடி




யாழ்ப்பாணம், டிசெ. 06

"ஆளுநர் நிதியத்தில் இருந்து கூட்டுறவு திணைக்களத்திற்கு வழங்கிய 3 கோடியே 20 இலட்சம் ரூபாவுக்கு என்ன நடந்தது என்பதைக் கூட்டுறவு அமைச்சர் வெளிப்படுத்த வேண்டும். இல்லையேல் புதிய வரவு - செலவுத் திட்டத்தில் அந்தத் திணைக்களத்துக்கான ஒதுக்கீட்டை ஆதரிக்க மாட்டோம்" எனத் தெரிவித்திருக்கிறார் வட மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம்.

மாகாண ஆளுநர் நிதியில் இருந்து எடுக்கப்பட்ட 14 கோடியே

06



## முன்மொழிவு

### வடக்கு நிதி நியதிச் சட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 06

வடக்கு மாகாணத்திற்கான 2018 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு நியதிச் சட்ட அறிக்கையை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று சபையில் முன்மொழிந்தார்.

06



## விடாப்பிடி ரெலோ, தமிழரசுக் கட்சி

### முடிவின்றி முடிந்தது கூட்டமைப்பின் கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 06

மட்டக்களப்பு மாநகர சபை யாருக்கு என்பதில் கூட்டமைப்பின் பங்காளிகளான ரெலோ, தமிழரசுக் கட்சி என்பன விடாப்பிடி நிலையில் உள்ளன. இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆசனப் பங்கீடு தொடர்பான கூட்டம் நேற்றும் முடிவு எட்டப்படாமலே முடிவுக்கு வந்தது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் இடையே ஆசனப் பங்கீடு தொடர்பான பேச்சு நடக்கிறது. இரண்டு சுற்றுப் பேச்சுக்கள் இணக்கமின்றி முடிந்த நிலையில் மூன்றாவது சுற்றுப் பேச்சு

06

## தமிழரசுக் கட்சி மீதான கசப்புணர்வு தீரவில்லை



"ஒழுக்கமான இடத்தில், ஒழுக்கமாக வாழ்ந்த என் மீது கட்சி மேற்கொண்ட ஒழுக்காற்று நடவடிக்கை இன்றும் மனதில் பெரும் கசப்புணர்வைத் தோற்றுவித்து

06

## சுவிஸ் குமார் தப்பித்த வழக்கு

### லலித் ஜெயசிங்கவுக்கு எதிராக சாட்சியம் பதிவு





ஊர்காவற்றுறை, டிசெ. 06

வித்தியா படுகொலை வழக்கு முக்கிய சூத்திரதாரி சுவிஸ் குமாரை தப்பிக்க விட்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் மூத்த பொலிஸ் மா அதிபர் லலித் ஜெயசிங்கவுக்கு எதிரான பிரதிப் பொலிஸ் மா அதிபரின் சாட்சியத்தைப் பதிவு செய்ய ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

06

### பொலிஸ் பரிசோதகருக்கு பகிரங்கப் பிடியாணை



புங்குடுதீவு, டிசெ.06

புங்குடுதீவு மாணவி வித்யா படுகொலை செய்யப்பட்ட வழக்கில் பிரதான குற்றவாளியான சுவிஸ் குமார் தப்பிச்சென்ற வழக்கில் தலைமறைவாக இருக்கும்

06

## ஆவா, தாரா வழியில் அஜித் குழு

சாவகச்சேரி, டிசெ. 06

யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டு, ரௌடித்தனத்தில் ஈடுபடும் ஆவா, தாரா குழுக்களின் வழியில் அஜித் குழு உருவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் குழு தென்மராட்சி - சாவகச்சேரியை மையமாகக் கொண்டு இயங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு மீசாலையில் இரு இளைஞர்கள் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டுச் சம்பவங்களை இந்தக் குழுவினரே நடத்தினர் எனவும் கூறப்பட்டது.

அண்மையில் நடந்த வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள்

06



**உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்**

**உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்**

**பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்**

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப் பெண் யாழில் கைது



யாழ்ப்பாணம்,டிசெ.06

யாழ். ஊர்காவற்றுறைப் பகுதியில் இந்தியப் பெண் ஒருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

ஊர்காவற்றுறை, சுருவில் பகுதியில் வசித்து வந்த இவர் குடிவரவு - குடியகல்வுச் சட்டத்தை மீறும் வகையில் சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து புடவை விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டிலேயே கைது செய்யப்பட்டார். இவர் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை முன்னிலைப்படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ)

## இனவழிப்பாளர்களைக் காக்கும் அரசிடம்

# நீதியை நாம் எவ்வாறு எதிர்பார்க்கலாம்?

## மகளிர் விவகார அமைச்சர் கேள்வி

யாழ்ப்பாணம், டி.செ.06

“தமிழர்களை இனவழிப்பு செய்த இராணுவத்தினரையும், அவர்களுக்குக் கட்டளைகளை வழங்கி வழிநடத்திய இனப்படுகொலைத் தலைவர்களையும் காப்பாற்றியதே நல்லாட்சி அரசின் கடந்த மூன்று ஆண்டுகால சாதனை. இப்படிப்பட்ட அரசிடம் எமக்கான நீதியை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?” என்று தன்னை சந்தித்த சர்வதேச ஊடகவியலாளரிடம், வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் கேள்வியெழுப்பியுள்ளார்.



சுவீடன் நாட்டைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஜொஹான் மைக்கெல்சனிற்கு வழங்கிய செவ்வியிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

“ஆட்சி மாற்றம் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திவிடவில்லை. புனர்வாழ்வு, அபிவிருத்தி என்பன இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட இனவழிப்பு போரினால் ஏற்பட்ட பக்கவிளைவுகளே. எனவே புனர்வாழ்வு, அபிவிருத்தியைக் காரணம்காட்டி நிரந்தரத் தீர்வை காலங்கடத்துவதனை ஏற்கமுடியாது. இனவழிப்புப் போர் எந்த நோக்கத்துக்காக மேற்கொள்ளப்பட்டதோ அதனை இப்போதும் நீடிக்கும் விதத்திலேயே இன்றைய அரசின் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மின்சாரக் கதிரை பற்றிய அச்சம், சர்வதேச யுத்தக் குற்ற விசாரணைப் பொறிமுறை மற்றும் சர்வதேச நீதிபதிகளை நாட்டுகுள் வரவழைத்தல் போன்ற விடயங்களை நல்லாட்சிக் காலத்தில் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா அண்மையில் தெரிவித்திருந்தார்.

தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுப்பதன் மூலம் சிங்கள மக்களையும் சிங்கள அரசியல்வாதிகளையும் திருப்திப்படுத்தும் போக்கிலேயே இன்றைய நல்லாட்சி அரசும் பயணித்து வருவதனை மைத்திரிபால சிறிசேனவின் மேற்குறித்த அறிவிப்பு துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றது.

நாட்டின் ஆட்சியாளர்களே இவ்வாறு வெளிப்படையாக கூறிவரும் நிலையில் அழித்தொழிக்கப்பட்டு நீதிக்காக போராடிக்கொண்டிருக்கும் எமக்கான நீதியை எவ்வாறு இவர்களிடம் எதிர்பார்க்க முடியும்? நடைபெற்ற தமிழினப்படுகொலைக்கு பொறுப்புக் கூறும் விடயத்தில், அமைதிப் பேச்சுவார்த்தைக்கு இணை அனுசரணை வழங்கிய இணைத்தலைமை நாடுகளும், இன அழிப்புப் போருக்கு நேரடி, மறைமுக உதவிகளை வழங்கிய அமெரிக்கா, இந்தியா, ரஷ்யா, சீனா, பாகிஸ்தான் உள்ளிட்ட அனைத்து நாடுகளுக்கும் பங்குண்டு” எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# தொண்டமானாறில் வாசிப்பு முகாம்

கரணவாய், டி.செ.06

மாணவர்களின் வாசிப்புத் திறனை ஊக்குவிக்குமுகமாக தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் வாசிப்பு முகாம் நேற்று இடம்பெற்றது.

தரம் 3, தரம் 4 மாணவர்களுக்கிடையில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக நடத்தப்பட்ட இந்த முகாமில் குறித்த மாணவர்களின் பெற்றோரும் அழைக்கப்பட்டு, மாணவர்களின் செயற்பாடுளை அவதானிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்து.(அ-66)

# மாணவர் ‘சுரக்ஷா’ காப்பீடு நாளை அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், டி.செ.06


இலங்கையிலுள்ள அனைத்து அரச மற்றும் அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளில் ‘சுரக்ஷா’ மாணவர் காப்பீட்டுத் தினம் நாளை வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கல்வி அமைச்சு, மாணவர்களின் நன்மை கருதி தேசிய ரீதியாக ‘சுரக்ஷா’ காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

குறிப்பாக அரச பாடசாலைகள், அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள், உதவி பெறும் மற்றும் சர்வதேசப் பாடசாலைகள் ஆகியவற்றில் இந்தத்திட்டம் அரசினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. நாளைய ஆரம்ப நிகழ்வில் மாணவர்களையும், பெற்றோரையும் அழைத்து குறித்த காப்பீட்டுத் திட்டம் பற்றியும், அதன் முக்கியத்துவத்தையும் எடுத்துக்கூறுமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இந்த அறிமுக நிகழ்வில் ‘சுரக்ஷா’ தொனிக் கீதத்தை முன்வைத்தல், ‘சுரக்ஷா’ நன்மைகள் தொடர்பாக அறிவுறுத்தல், ‘சுரக்ஷா’ வேலைத்திட்டம் தொடர்பான கையேடுகளைப் பகிர்ந்தளித்தல் போன்ற வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-66)





# ‘ஸ்ரிக்கர்’ பொலிஸார்

வடமராட்சி, டி.செ.06

போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு, நெல்லியடிப் பகுதியில் உள்ள வாகனங்களில், போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு ‘ஸ்ரிக்கர்களை’ பொலிஸார் ஒட்டினர். அத்துடன் விழிப்புணர்வுத் துண்டுப்பிரசுரங்களையும் பொலிஸார் பொது மக்களுக்கு விநியோகித்தனர். (அ-11)

# உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் பிரார்த்தனை மண்டபம்





வடமராட்சி, டி.செ.06

யாழ் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட பிரார்த்தனை மண்டபம் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் திருமதி ஜி.சேதுராஜா தலைமையில் நடைபெற்ற இந்தத் திறப்பு விழா நிகழ்வில், பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாணசபை உறுப்பினர்களான எஸ். அகிலதாஸ் , எஸ்.சுகிர்தன், கே.தர்மலிங்கம் மற்றும் சிவன் அறக்கட்டளை நிதியத் தலைவர் வி. கணேஸ்வரன், கௌரவ விருந்தினராக கோட்டக்கல்விப் பணிப்பாளர்கே.யோகநாதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

22 லட்சம் ரூபா செலவில் கட்டிமுடிக்கப்பட்ட குறித்த பிரார்த்தனை மண்டபத்துக்கு நிகழ்வுக்கு வந்திருந்த மாகாணசபை உறுப்பினர்கள் 4 பேரும் ,சிவன்அறக்கட்டளை நிதியத் தலைவர் கணேஸ்வரனுமே நிதிப்பங்களிப்பினைச் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
புதன், 06 டிசெம்பர் 2017 ethirolimedia@gmail.com

## கூட்டுகளும் குழம்பிய குட்டைகளும்

கூட்டு என்று வந்துவிட்டாலே குழப்பங்களுக்கும் பஞ்சமிருப்பதில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று ஒரே குடையின் கீழ் ஒன்றிணைந்து செயற்பட்டாலும், உள்ளூர குத்து வெட்டுக்களும் தாராளமாகவே இடம்பெற்றிருந்தன. ஆயினும் வீட்டுச் சின்னத்தை விட்டு வெளியே போனால், செல்லாக்காசாகி விடுவோமோ என்ற அச்சத்தில் பங்காளிக் கட்சிகள், தமிழரசுக் கட்சியின் தாளத்துக்கு ஆடிக்கொண்டிருந்தன. இடைக்கிடையே, தமிழரசுக் கட்சிக்கு எதிரான குரல்கள் உள்ளிருந்து ஒலித்தாலும், அவையும் சாம, தான, பேத, தண்ட முறைகளினால் அடக்கப்பட்டன.

அத்துடன் மாற்றுக் கட்சிகளினூடாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்வாங்கப்பட்டு, பின்னர் தமக்கான வாக்கு வங்கிகளை உருவாக்கிக் கொண்டவர்களை, தமிழரசுக் கட்சி உறுப்பினர்களாக 'ஞானஸ் தானம்' செய்யும் கைங்கரியத்தையும் தமிழரசுக் கட்சி பகிரங்கமாகவே செய்தது.

இந்த ஆள்பிடிப்பில் அதிகம் பாதிக்கப்பட்டதென்னவோ ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சிதான். அந்தக் கட்சியால் கூட்டமைப்புக்குள் புகுத்தப்பட்ட சிறீதரன் தொடக்கம் ரவிகரன் வரைக்கும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்ற அரசியல்வாதிகளை தமிழரசுக் கட்சி உறுப்பினர்களாக மாற்றியதால், ஈ.பி.ஆர்.எல்.எவ் க்கு நடுக்கம் தொடங்கியிருந்தது. விட்டால் மிச்சமிருக்கும் உறுப்பினர்களையும் தமிழரசுக் கட்சி தனக்குள் ஐக்கியமாக்கி விடும் என்ற அச்சமும், தங்கள் வாக்கு வங்கிகள் தமிழரசுக் கட்சியிடம் மொத்தமாகப் பறிபோய்விடுமோ என்ற எண்ணமும் கூட்டமைப்புக்கு எதிரான கலகக் குரலை, சுரேஷ் பிரமேச்சந்திரனைப் பலமாக எழுப்பச் செய்தன. ஆனாலும் என்னதான் செய்தாலும் சுரேஷ், கூட்டமைப்பை விட்டு, வெளியேறவே மாட்டார் என்பதே தமிழரசுக் கட்சியின் கருதுகோளாக இருந்தது. ஏன், சுரேஷ் கூட வீட்டை விட்டு வெளியே போவதைப் பற்றி, நினைத்தும் பார்த்திருக்க மாட்டார்.


ஆனால், ஒரு கட்டத்தில் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளாத குறையாக தமிழரசுக் கட்சி கொடுத்த அழுத்தங்கள் உந்த, வீட்டுக்கு வெளியே காலடி வைத்து விட்டார். ஏற்கனவே வீட்டை விட்டு வெளியே வந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமாரோடு புதுக்கூட்டணிக்கும் அச்சாரம் போட்டார். ஆனால் அத்திபாரம் போடப்பட முதலே புதுக்கூட்டணி ஆட்டம் காணத் தொடங்கிவிட்டது. இன்னமும் சின்னப் பிரச்சினைகள், அந்தக் கூட்டணியின் உருவாக்கத்துக்கு பெரும் தடைக் கல்லாக இருக்கின்றன.

இந்த நிலையில், கூட்டமைப்புக்குள்ளும் அமுங்கிக் கிடந்த குமுறல்கள் உள்ளூராட்சித் தேர்தல் தொகுதிப் பிரிப்போடு பெரிதாக வெடித்துள்ளன. மூன்று நாள்களாகப் பேச்சுக்கள் நடத்தியும் இன்னும் ஒரு முடிவுக்கு வர முடியாமல் கூட்டமைப்பும் தடுமாறுகின்றது.கேட்டதைத் தராவிட்டால், சுரேஷின் பாதையில், தனித்துச் செல்லப் போவதாக புளொட்டும், ரெலோவும் தமிழரசுக் கட்சிக்கு பயம் காட்டுகின்றன. தமிழரசுக் கட்சியும் செய்வதைச் செய்யுங்கள் என்று விட்டுக் கொடுப்புக்குச் செல்லாமல் வீம்புக்கு நிற்கிறது. சில சமயங்களில் கூட்டமைப்பில் இருந்து உள்ளூராட்சித் தேர்தலோடு ரெலொவும், புளொட்டும் பிரிவதற்கான சந்தர்ப்பங்களும் அதிகம்.

இன்னும் என்னென்ன கூத்துக்கள், தேர்தலுக்கு முன்னர் வரப்போகின்றனவோ? எங்கள் பொட்டுக் கேடுகளை கூட்டுக்கள் என்ற பெயரில் நாமே சந்தை பரப்புகிறோம். இப்படி தமிழர் தரப்பின் இரு பிரதான கூட்டுகளும், குழம்பிய குட்டையாகி நிற்பதைப் பார்த்து, தன் திட்டம் நிறைவேறிவிட்ட மகிழ்ச்சியில் பேரினவாதம் கொக்கரிக்கத் தொடங்கிவிட்டது. தேர்தல் பச்சோந்திகளை தங்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்ய, வாக்களித்த குற்றத்துக்காக தமிழர்கள் தலை குனியத்தான் வேண்டும்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# ஒரேயொரு கேள்வி
# அவகாசம் 3 வருடம்

கொழும்பு, டிசெ.06

நாடாளுமன்றில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாய்மூலமான கேள்வி ஒன்றுக்குப் பதிலளிப்பதற்காக அமைச்சரொருவர் 3 வருடங்கள் அவகாசம் கோரியுள்ளார்.

விவசாயத்துறையில் வனஜீவராசிகளால் நாசமடைந்த விளைநிலங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த அளுத்கமகே கேள்வி எழுப்பினார்.

இதன்போது எழுந்த, வனவள அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா, குறித்த கேள்விக்கான பதிலை வழங்க தனக்கு 3 வருடங்கள் அவகாசம் தேவையெனக் குறிப்பிட்டார். (அ)

## மின்மானி வாசிப்பாளர்கள் வடக்கு, கிழக்கில் நியமனம்

கொழும்பு, டிசெ.06

"வடக்கு கிழக்கு மாகாணங்களில் புதிதாக மின்மானி வாசிப்பாளர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். அத்துடன் மின்கட்டணம் ஒருபோதும் அதிகரிக்கப்படமாட்டாது" என்று மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா நாடாளுமன்றில் நேற்றுத் தெரிவித்தார்.

"வடக்கு ,கிழக்கு மாகாணங்களில் மின்மானி வாசிப்பாளர்களுக்கு பற்றாக்குறை நிலவுகின்றது. இதனால் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையே மின்மானி வாசிப்பு இடம்பெறுகின்றது" என நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்குறித்தவாறு தெரிவித்தார். (அ)

## அதிகாரியின் அசண்டையால் கஞ்சா வழக்கு தள்ளுபடி

யாழ்ப்பாணம், டிசெ. 06

யாழ். நீதிவான் நீதிமன்றின் கட்டளையை மீறிய பொலிஸ் அதிகாரியை கண்டித்த நீதிவான், தவறிழைத்த அதிகாரிக்கும் தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்குமாறும் சட்ட மா, பொலிஸ் அதிபர்களுக்கும் பரிந்துரை செய்துள்ளார்.

கஞ்சா போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றசாட்டில் நாவற்குழியைச் சேர்ந்த ஒருவரை **2015** நவம்பர் **29** ஆம் திகதி நாவற்குழி யாழ். - மன்னார் வீதியில் பொலிஸார் கைது செய்தனர். பல மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் பின்னர், பிணையில் விடுவிக்கப்பட்டார். இந்நிலையில் சந்தேகநபருக்கு எதிரான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

விளக்கத்துக்கு அவசியமான சான்றுப்பொருள் தொடர்பான அறிக்கை மன்றால் கோரப்பட்டது. சான்றுப் பொருளை அரச பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பவில்லை என யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியான உப பொலிஸ் பரிசோதகர் மன்றில் தெரிவித்தார்

"சந்தேகநபருக்கு எதிரான வழக்குப் பதிவு செய்யப்பட்டு 2 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. எனினும் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கான சான்றுப் பொருள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. அதனை அரச பகுப்பாய்வுக்கு அனுப்பி அறிக்கை பெற இந்த மன்று பொலிஸாருக்குக் கட்டளை வழங்கியிருந்தது.

எனினும் நீதிமன்றக் கட்டளையை உதாசீனம் செய்யும் வகையில் பொலிஸார் செயற்பட்டமை ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறு நடந்த பொலிஸ் அதிகாரி உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களை மன்று கண்டிக்கின்றது. அத்துடன் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு இந்த மன்று பரிந்துரைக்கின்றது. சான்றுப்பொருளை உறுதி செய்யாது இந்த வழக்கைத் தொடர முடியாது. இந்த வழக்கிலிருந்து சந்தேகநபர் விடுவிக்கப்படுகிறார்" என்று கட்டளையிட்ட நீதிவான், வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

## தங்கமாகப் பாயும் இராவணா நீர்வீழ்ச்சி



கொழும்பு, டிசெ.06

இலங்கையில் நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக இராவணா எல்ல நீர்வீழ்ச்சி தங்க நிறமாக மாற்றமடைந்துள்ளதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

தற்போது ஊவா மாகாணத்தில் நிலவும் அதிக மழையுடனான காலநிலை காரணமாக , பல்வேறு பகுதிகளில் இருந்தும் சேற்றோடு நீர் பாய்ந்து வருவதாகவும், அதுவே நீர்வீழ்ச்சியுடன் கலந்து, தங்க நிறமாகத் தோற்றமளிப்பதாகவும் கூறப்படுகின்றது. மிக அருகில் சென்றாலே அது சேற்று நீர் எனக் கண்டுபிடிக்க முடியும் எனவும், தூரத்தில் நின்று பார்க்கும் போது இராவணா எல்ல நீர்வீழ்ச்சி தங்கமாகப் பாய்வது போல இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## சிறந்த பொலிஸாருக்கு விருதும் பரிசுகளும்




மன்னார், டிசெ.06

மன்னார் மாவட்டத்தில் பொலிசார் போதைப் பொருட்களை கைப்பற்றி கடத்தலைத் தடுத்தமை, வாகனப் போக்குவரத்தில் கடமையுணர்வுடன் செயற்பட்டு விபத்துக்களைத் தவிர்த்தமை , குற்றச் செயல்களைக் கண்டுபிடித்தமை போன்ற சிறந்த சேவையாற்றிய, சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் நேற்றுக் கௌரவிக்கப்பட்டனர்.

குறித்த பொலிஸ் அதிகாரிகளுக்கு சன்மானம் வழங்கும் வைபவம் மன்னார் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

மன்னார் வவுனியா பிரதி பொலிஸ்மா அதிகாரி தேசப்பந்து தென்னக்கோன், மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சியாந்த பீரீஸ் ஆகியோர் சிறப்பாகச் செயற்பட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு விருதுகளையும் , பரிசுகளையும் வழங்கினர். (அ)

## இன்று நாளும் கோளும்

06.12.2017 புதன்கிழமை ஏவிளம்பி வருடம் கார்த்திகை மாதம் 20 ஆம் நாள்

திரிதியை பி.ப. 03.30 மணி வரை புனர்பூசம் மு.ப. 3.30 மணி வரை

இராகுகாலம் 12.00 - 01.30 சுபநேரம் மு.ப. 10.15 - 11.45 எமகண்டம் 07.30 - 09.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| செலவு | தடங்கல் | நட்பு | வரவு | கவனம் | அமைதி | வீம்பு | நன்மை | போட்டி | கவனம் | நஷ்டம் | மகிழ்ச்சி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli

புதன் 06 டிசெம்பர் 2017



# முகமூடிக் கொள்ளையர் வங்கியில் கைவரிசை

கொழும்பு,டிசெ.06

தங்காலை - குடாவெல்ல பகுதியிலுள்ள அரச வங்கியொன்றுக்குள் நுழைந்த இருவர் பணத்தைக் கொள்ளையடித்த துடன், வாடிக்கையாளர் ஒருவரை சுட்டுக் காயப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனரெனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முகத்தை மூடியவாறு மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இவ்வாறு கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் சுமார் 50 - 60 இலட்சம் ரூபா வரையான பணத்தைக் கொள்ளையடித்துள்ளனர். இதன்போது வங்கிக்கு வந்த வாடிக்கையாளர் ஒருவர் மீதும், சந்தேக நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இதனால், காயமடைந்த அவர் தங்காலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ)



## கண்டுபிடி அவனைக் கண்டுபிடி, கண்டுபிடி அவளைக் கண்டு பிடி?

இதைப் பேப்பரிலை பாத்த நேரந் துவக்கம் எனக்குச் சிரிக்கிறதோ? அழுகிறதோ? எண்டு தெரியாமல் கிடக்கு. முதலிக்கும் சொல்லிச் சிரிச்சனான். இலங்கையிலை அதுவும் ஒரு சிங்கள ஏரியாவிலை இது நடந்திருக்கு. வழக்கமா அரசியல் வாதிதான், மற்றையவையளை வெருட்டிறது. இது அரசியல் வாதியை ஒருத்தன் வெருட்டி இருக்கிறான் எண்டால் பாருங்கோவன்!

வழக்கமா ஒரு பிழைவிட்ட, அநீதியான, நேர்மையில்லாமல்ல நடந்த ஒராளைத் தான், வேலை செய்யிற இடத்தை மாத்தச் சொல்லிச் சனம் போராட்டம் நடத்துவினம். அப்பிடி நடத்தினதாத்தான் கேள்விப் பட்டனாங்கள். ஆனால் சமூகத்துக்குக் கேடுசெய்தவையைத் தட்டிக் கேட்டவனை, நடந்த குற்றங்களுக்கு உரியாக்களை விசாரிச்சுத் தண்டனை குடுக்க வெளிக்கிட்ட ஒரு ஆளை, சமூகப் பொறுப்பாக இருந்த ஒரு ஆளை இடமாற்றம் செய்யச் சொல்லிக் கேட்டிருக்கினமாம். இதைச் சனம் கேக்கேல்லை. பாதாளக் கோஷ்டி ஒண்டு அரசியல்வாதியிட்டைக் கேட்டிருக்கு. அப்பிடி மாத்தாட்டில் இனிமேல் வாற உள்ளூராட்சித் தேர்த்தலிலை தாங்கள் அந்த அரசியல் கட்சிக்கு ஆதரவு தரமாட்டினம் எண்டு திட்டவட்டமாத் தெரிவிச்சிருக்கினமாம். அதோடை வெருட்டியுமிருக்கினமாம்.

“நவகமுவ” எண்ட ஒரு சிங்கள இடம். அங்கை இருக்கிற பொலிஸ் ஸ்டேசன்ரை பொறுப்பா இருக்கிறவற்றை பேர் மஞ்சுள டி சில்வா. அவர் என்ன செய்திருக்கிறார் எண்டால் தன்ரை பொலிஸ் ஏரியாவுக்கை இருக்கிற பாதாளக் கோஷ்டியின்ரை அடாவடித் தனங்களைத் தட்டிக் கேக்க வெளிக்கிட்டிட்டாராம். பாதாள கோஷ்டி என்ன செய்திருக்கினமெண்டால் தங்கடை ஏரியாவிலை இருக்கிற கடைக்காரரிட்டை கப்பம் கேக்கிறது, வெருட்டிறது,அடிக்கிறது எண்டு பலதையும் செய்திருக்கினம். அதை இந்த பொலிஸ் பெரியவன் விடேல்லை, இரண்டு போட்டு ஆக்களை கூட்டுக்கை போட்டிட்டார். அப்ப அந்தக் கோஷ்டி யின்ரை தலைவராலை ஒண்டும் செய்யேலாமைப் போச்சு. அவன் என்ன செய்திருக்கிறானெண்டால் போய் அரசியல் வாதியிட்டை இப்பிடி ஒரு டிமான்ட்டை வைச்சிருக்கிறான்.

எப்பிடி இருக்குது உந்தக் கதை? எப்பிடி இருக்கிது நாடு. எங்கை போகுது உலகம் பாத்தீங்களே? தொழில் சங்கம் டிமான்ட் பண்ணுறமாதிரி உவங்களும் டிமான்ட் பண்ண வெளிக்கிட்டிட்டாங்கள். கொள்ளையடிச்சுக் கப்பம் கேக்கிறவங்கள் ஒரு அரசியல்வாதியிட்டை லாப நட்டம் பேசுற அளவுக்கு அவேன்ரை வெற்றி, தோல்வி கொள்ளைக் கோஷ்டியின்ரை கையிலைதானே இப்ப இருக்குது. அரசியல்வாதியளுக்கும் கொள்ளையடிக்கிறவங்கள் எவ்வளவு தேவைப்படுகிறாங்கள் எண்டு பாருங்கோவன். தங்களுக்கு எதிராக் கதைக்கிற ஆக்களை அடிக்க, கொலை செய்ய, தாங்கள் செய்யிற ஒட்டு மாட்டுகளுக்குப் பாதுகாப்பா இருக்க அவைக்கும் நாட்டாமை விடுகிறவையளையும், சண்டித்தன காரரையம் தானே தேவைப் படுகிது. உது இந்தியாச் சினிமாப் படங்களைப் பாக்கிற மாதிரிக் கிடக்கு என்ன? அதைப் பாத்துத் தான் உந்த பாதாளக் கோஷ்டியளும் பழகீட்டாங்களோ தெரியாது.

அப்ப கொள்ளைக் கோஷ்டியளின்ரை ஒத்தாசையோடை வாற அரசியல்வாதி ஆற்றை கொன்றோலிலை இருப்பர்? அவராலை அமைக்கிற அரசாங்கம் ஆற்றை கொன்ரோலிலை இருக்குமெண்டு நினைக்கிறீங்கள்? அப்ப மக்கள் சொல்லுறதை அரசியல்வாதி கேப்பரோ இல்லாட்டி கொள்ளைக் கோஷ்டித் தலைவன் சொல்லுறதை கேப்பரோ? அப்ப அப்பிடி வாற அரசியல்வாதிக்கு வோட்டுப் போட்டவையின்ரை நிலைமை என்ன ஆகும் எண்டு நினைக்கிறீங்கள்?

நாட்டிலை சட்டத்தையும் ஒழுங்கையும் தீர்மானிக்கிறது ஆர்? அரசாங்கம். அந்த அரசாங்கத்தை நடத்திறது ஆர்? அரசியல்வாதியள். அந்த அரசியல்வாதியளுக்கே உந்தத் தொடர்பும், உந்த வெருட்டலுமெண்டால்...!எங்களைப் போலை சாதாரண சனங்களின்ரை நிலைமை...? உது சிங்களச் சனத்திட்டை மட்டும் எண்டு நினையாதையுங்கோ, ஆண், பெண் எண்ட வித்தியாசமில்லாமல் எங்கடை ஆக்களிலையும் உப்பிடியானவை ஒண்டிரண்டு பேர் இருக்கினம்?

“கண்டு பிடி அவனைக் கண்டு பிடி?

கண்டு பிடி அவளைக் கண்டுபிடி”.. எண்டு பாட்டுப் பாடாதையுங்கோ.

- வில்லங்கம் விநாசி

## போஷாக்கு செயலமர்வு

வடமராட்சி, டி.செ.06

வடமராட்சி கல்வி வலயப்பாடசாலை ஆசிரியர்களுக்கான பாடசாலை சுகாதாரம் மற்றும் போஷாக்குத் தொடர்பான ஒருநாள் செயலமர்வு நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிமுதல் அலுவலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் பாடசாலைகளில் இந்தத் திட்டத்துக்குப் பொறுப்பாகவுள்ள ஆசிரியர்களை அனுப்பி வைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கேட்டுள்ளார். (அ-66)

## மூன்றாம் தவணை விடுமுறை டிசெ.08

கொழும்பு,டிசெ.06

நாட்டில் உள்ள சகல அரச பாடசாலைகளுக்கும் மூன்றாம் தவணை விடுமுறை எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை விடப்படவுள்ளது.

பாடசாலைகளுக்கான 2018ஆம் ஆண்டின் முதலாவது தவணை ஜனவரி மாதம் 2ஆம் திகதி ஆரம்பமாவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் எதிர்வரும் 12ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த. சாதாரணத் தரப் பரீட்சைகள் மத்திய நிலையமாகச் செயற்படும் பாடசாலைகள் ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனக் கல்வியமைச்சு அறிவித்துள்ளது. எதிர்வரும் 12ஆம் திகதி ஆரம்பமாகும் சாதாரணத் தர பரீட்சைகள் 21 ஆம் திகதி வரை நடைபெறும். (அ)

## இளைஞன் சுட்டுக்கொலை: பொலிஸாருக்குப் பிணை

வடமராட்சி, டிசெ.06

வடமராட்சி துன்னாலைப் பகுதியில் இளைஞன் ஒருவரைச் சுட்டுக் கொன்றனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட உப -பொலிஸ் பரிசோதகர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஆகிய இருவரையும் பிணையில் விடுவித்தது யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம்.



வடமராட்சி கிழக்கில் கடந்த ஜூலை மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் துன்னாலையைச் சேர்ந்த யோகராசா தினேஷ் (வயது -24) என்ற இளைஞன் கொல்லப்பட்டார்.

“மணல் கடத்தலில் ஈடுபட்ட இளைஞனே சுட்டுக்கொல்லப்பட்டார். மணல் ஏற்றிய ஹண்டரைப் பொலிஸார் வழிமறித்தனர். எனினும் அதன் சாரதி நிறுத்தாது வாகனத்தைச் செலுத்திச் சென்றார். அதனால் வாகனத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அதிலேதான் ஹண்டரின் சாரதியான அந்த இளைஞன் கொல்லப்பட்டார்” என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தினர் என்ற குற்றச்சாட்டில் அன்றைய தினமே உப பொலிஸ் பரிசோதகர் சிவராசா சஞ்சீவ் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் முத்தலிப் மொகமெட் முபாரக் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் இருவரும் கடந்த ஜூலை 10ஆம் திகதி முதல் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றின் கட்டளையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

சந்தேகநபர்கள் இருவர் சார்பில் சட்டத்தரணி வி.திருக்குமரன் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தனித்தனியே பிணை விண்ணப்பங்களை முன்வைத்தார். அவற்றின் மீதான விசாரணைகள் இடம்பெற்று வந்தன. சந்தேகநபர்களை பிணையில் விடுவிக்க ஆட்சேபனை இல்லை என அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் மன்றில் தெரிவித்தார்.

இதனையடுத்து, “சந்தேக நபர்கள் இருவரும் தலா 25 ஆயிரம் ரூபா பணத்தை பருத்தித்துறை நீதிவான் மன்றில் வைப்பிலிடவேண்டும். ஒவ்வொரு சந்தேகநபர் சார்பிலும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றால் ஏற்றுக்கொள்ளத்தக்க 2 இலட்சம் ரூபா பெறுமதியான இருவர், ஆள்பிணை நிற்கவேண்டும். சந்தேகநபர்கள் வெளிநாடு செல்ல முடியாது. அத்துடன், 3 மாதங்களுக்கு ஒரு முறை பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர்கள் கையொப்பமிடவேண்டும்” என்ற நிபந்தனைகளுடன் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் பிணையில் விடுவிக்கக் கட்டளையிட்டார். (அ)

## கிளிநொச்சியில் அனர்த்த அலுவலகம்

கிளிநொச்சி, டிசெ.06

இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டால், அதிலிருந்து மக்களைப் பாதுகாப்பது தொடர்பான அவசர கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் அருமைநாயகத்தின்தலைமையில் நேற்று நடைபெற்றது.



தற்போது வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள தாழமுக்கம் அடுத்து வரும் நாட்களில் இலங்கையையும் தாக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தம் ஏற்பட்டால் அதனை எதிர்கொள்ளல், முன்னாயத்தச் செயற்பாடுகள், தொடர்பில் இந்தக் கலந்துரையாடலின் போது அரச திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என்போர் யோசனைகளை முன்வைத்தனர்.

சூறாவளி ஏற்பட்டால், அதன்போது கிளிநொச்சி மாவட்டத்துக்கு ஏற்படும் சேதங்கள் மற்றும் உயிரிழப்புக்களை எவ்வாறு குறைத்துக்கொள்வது எனவும், விசேடமாக கடற்தொழிலாளர்கள் மற்றும் கரையோரத்தில் வசிக்கும் பொதுமக்களை எவ்வாறு வெளியேற்றுவது என்பது தொடர்பாகவும் இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

கலந்துரையாடலின் முடிவில் அனர்த்தம் தொடர்பாக அவசர அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது அத்துடன் அனர்த்தங்கள் ஏதும் ஏற்பட்டால் 0212285330, 0772320528 என்னும் தொலைபேசி இலக்கங்களூடாக அறிவிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli





# நகைத் திருடர்களை தேடும் மோப்பநாய்

வவுனியா,டிசெ.06

வவுனியா, குட்செட் வீதியில்உள்ள வீடொன்றினையுடைத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை அங்கிருந்த நகைகள் திருடிச் செல்லப்பட்டுள்ளன.

குறித்த வீட்டில் யாரும் இல்லாத போது பின் வேலி வழியாகச் சிலர் உள்நுழைந்துள்ளனர். இவ்வாறு வந்தவர்கள் வீட்டுக் கதவையுடைத்து வீட்டுக்குள் இருந்த சங்கிலி, தோடு, மோதிரம் உள்ளிட்ட ஐந்து பவுண் நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர். இந்த நிலையில், வீட்டில் வசிப்பவர்கள் வீட்டுக்குச் சென்ற போதே தங்க நகைகள் திருட்டுப் போயிருந்தமை தெரியவந்தது. இதனடிப்படையில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து, மோப்ப நாயின் உதவியுடன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# சந்தேக எஸ்.எம்.எஸ் சந்தி சிரிக்கச் சண்டை

கொழும்பு,டிசெ.06

எஸ்.எம்.எஸ் ஒன்றால் ஏற்பட்ட பிரச்சினையால், மனைவியைச் சித்திரவதை செய்த நபரொருவர் பொலிஸ் நிலையத்தில் வைத்துப் 'பிரேக் ஒயில்' அருந்திய சம்பவமொன்று வரகாபொல பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை பதிவாகியுள்ளது.

கணவரின் கைபேசிக்குப் பெண்ணொருவர் குறுந்தகவல் அனுப்பிருந்தமை தொடர்பில் கோபமடைந்துள்ள மனைவி, அது தொடர்பில் கணவரிடம்விசாரித்தார். அதனைத் தொடர்ந்து குறித்த மனைவி , கணவரால் இவ்வாறு கொடூரமாகச் சித்திரவதைக் குள்ளாகியுள்ளார். அதனைத் தொடர்ந்து, சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடொன்று மேற்கொள்ளப்பட்ட பின்னர், கணவர் விசாரணைக்காக அழைத்து வரப்பட்டிருந்தார். இதன்போதே அவர் 'பிரேக் ஒயில்' அருந்தியுள்ளார். எனினும் அவர் காப்பாற்றபட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (அ)

# அரிசி விலை ஆனை விலை

கொழும்பு,டிசெ.06

நாட்டிலுள்ள அனேக சந்தைகளில், அரிசியின் விலை வேகமாக அதிகரித்து வருவதாக நுகர்வோர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களாக இந்த விலை அதிகரிப்புத் தொடர்வதாகவும், குறிப்பாக உள்நாட்டு அரிசி வகைகளின் விலைகளிலேயே இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அரிசி வியாபாரிகள் குறிப்பிட்டுள்ளனர். அரிசி உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியே, விலை அதிகரிப்புக்கான காரணமென மரதஹமுல அரிசி உற்பத்தியாளர்களின் சங்கத் தலைவர் பீ.கே.ரஞ்சித் தெரிவித்தார். "கடந்த மூன்று மாதங்களாக, நாட்டில் நிலவிய கடும் வறட்சி மற்றும் மழையுடனான வானிலையினால் மூன்று போகங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் சிறிய மற்றும் நடுத்தர அரிசி உற்பத்தியாளர்கள் தம்மிடம் மேலதிக அரிசி களஞ்சியத்தில் இல்லையெனத் தெரிவித்துள்ளனர். இதனையடுத்தே, 500 க்கும் அதிகமான சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலைகள் மூடப்பட்டுள்ளன"என அவர் தெரிவித்தார். (அ)




# கரணவாயில் நடமாடும் சேவை

வடமராட்சி, டிசெ.06

கரணவாய் ஜே/350 கிராமசேவையாளர் பிரிவில் உள்ள மூத்தவிநாயகர் சனசமூகநிலைய மண்டபத்தில் தேசிய அடையாள அட்டைக்கான நடமாடும் சேவை நேற்று நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டிப் பிரதேசெ செயலர் க.சிறிமோகனன் கலந்து கொண்டு, நடமாடும் சேவையை ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது ஏராளமான மக்கள் தங்கள் அடையாள அட்டை தொடர்பான பிரச்ச்சினைகளுக்குத் தீர்வு கண்டனர். (அ-11)

# அந்த நாள் ஞாபகம்.....!



## 06.12.1992

இந்தியாவின் உத்தரப் பிரதேசத்திலுள்ள அயோத்தியின் பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த பாபர் மசூதியை, இராமர் பிறந்த இடத்தைக் (இராமஜென்மபூமி) கைப்பற்றும் பொருட்டு இந்துக் கரசேவகர்களால் இடித்தழிக்கப்பட்டது. இந்த அழிப்பினால் இந்து – இஸ்லாமிய மதக்கலவரங்கள் பல மாதங்கள் தொடர்ந்து நடைபெற்றமையால் 2,000 பேர் வரை உயிரிழந்தனர்.

# தடை!

கொழும்பு,டிசெ.06

நேற்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை கல்விப் பொதுத் தராதரப் சாதாரண தர மாணவர்களுக்கான செயலமர்வு, கருத்தரங்கு, மேலதிக வகுப்புக்கள் என்பவற்றை நடத்த, பரீட்சைகள் திணைக்களத்தால் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடையை மீறுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (அ)

# குளத்தில் குளிக்கச் சென்றவர் சாவு

முல்லைத்தீவு,டிசெ.06

முல்லைத்தீவு - மாங்குளம் பகுதியில் குளத்தில் குளிக்கப் போன இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவர் நேற்றுச் செவ்வாய்க்கிழமை சடலமாக மீட்கப்பட்டார்.

மாங்குளத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான காளியப்பன் புதியகுமார் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். மதகு வைத்த குளத்தில் வசித்து வரும் மேற்படி குடும்பஸ்தர் குளிக்கச் சென்ற சமயம் நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் எனப் பிரதேச மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இந்தச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ஓரினச் சேர்க்கை பற்றி மகிந்த சொன்ன பொய்

கொழும்பு,டிசெ.06

இலங்கையில் ஓரினச்சேர்க்கைத் திருமணத்தைச் சட்டரீதியாக்குவதற்கான யோசனையொன்று அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்படவுள்ளதாக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

பதுளை வின்சன்ட் டயஸ் மைதானத்தில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியின் மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.



"இந்த வாரம் அமைச்சரவைக்குக் கொண்டு வரப்படவுள்ள அறிக்கைகளில் பழைய கதையும் உள்ளது. அது தான் ஓரினச்சேர்க்கை திருமணத்தை சட்டரீதியாக்குவதாகும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதனை அனுமதிக்க மாட்டார் என்று எனக்குத் தெரியும். அதில் எனக்கு நம்பிக்கை உள்ளது. எனினும் பிரதமர் ரணில் ஓரினச் சேர்க்கையைச் சட்டபூர்வமாக்கவே ஒற்றைக்காலில் நிற்பார். பிரதமர் கூறும் எந்தவொரு விடயத்துக்கும் கைதூக்கும் அமைச்சரவையொன்றே இப்போதுள்ளதால், சில வேளைகளில் இலங்கையிலும் ஓரினச் சேர்க்கை சட்டபூர்வமாகும் ஆச்சரியமும் நிகழலாம்" என மகிந்த மேலும் தெரிவித்தார்.

எனினும் , 'ஓரினச் சேர்க்கை பற்றிய எந்தவொரு யோசனையும் அமைச்சரவையில் கொண்டு வரப்படாது எனவும் மகிந்த சொல்வதில் எள்ளளவும் உண்மையில்லை என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். (அ)









# வவுனியாவில் பாரதி விழா

வவுனியா, டிசெ.06

பாரதி முன்பள்ளி நடத்திய 'பாரதி கலைவிழா' வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

முன்பள்ளி அதிபர் திருமதி ஜெயராசா சந்திரா தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், பிரதம விருந்தினராக வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி. பொ. பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொண்டார். நிகழ்வின் இறுதியில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்திலும் ஜெ. நினைவு நிகழ்வு





யாழ்ப்பாணம், டிசெ.06

மறைந்த தமிழக முன்னாள் முதல மைச்சர் ஜெயலிதாவின் முதலாவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி அஞ்சலி செலுத்தும் நிகழ்வு யாழ். கைதடி மத்தி குமரநகர் சனசமூக நிலையத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது.

இதன்போது ஜெயலலிதாவின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வு, கூட்டுறவு அமைச்சர் அனந்தி சசிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், சாவகச்சேரி நகர சபையின் முன்னாள் உறுப்பினர் கிஷோர் உட்படப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். இதன்போது, 30 பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.(அ)

# மன்னார் மீனவர்கள் நீதிமன்றால் விடுவிப்பு

மன்னார், டிசெ.06

தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகளைக் கொண்டு மீன் பிடியில் ஈடுபட்டதாகவும், மீன்பிடி அனுமதிப் பத்திரம் வைத்திருக்கவில்லையெனவும் கைது செய்யப்பட்டிருந்த மன்னார் தாழ்வுப்பாடு மீனவர்கள் 25 பேரும் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறையைப் பயன்படுத்தியமை, மீன்பிடி அனுமதிப்பத்திரத்தை வைத்திராமை என்னும் குற்றச்சாட்டுகளின் பேரில் தாழ்வுப்பாடு மீனவர்கள் 25 பேர் கடற்படையால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டிருந்தனர். இதனை எதிர்த்து அந்தப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால், கடற்படையினர் தாம் கைது செய்த மீனவர்களை பொலிஸில் ஒப்படைத்தனர்.

இந்த நிலையில் குறித்த மீனவர்கள் மன்னார் மாவட்ட நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். இவர்களுக்கு எதிராகப் பொலிஸார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாததால், மீனவர்களையும், அவர்களின் மீன்பிடி உபகரணங்களையும் நீதிபதி விடுவிக்க உத்தரவிட்டதோடு, வழக்கையும் தள்ளுபடி செய்தார். (அ)

## தொடர்ச்சிகள்

**விடாப்பிடி...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைச் செயலகத்தில் நடந்தது.

இந்தக் கூட்டத்தில் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சிகளாக உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் கட்சிகளின் மூத்த, இரண்டாம் நிலைத் தலைவர்கள் கலந்து கொண்டனர். மாலை 4 மணிக்குத் தொடங்கிய கூட்டம் சுமார் 3 மணி நேரம் நீடித்தது. இதில், ஆசனப் பங்கீடு தொடர்பாக எந்த முடிவும் எட்டப்படவில்லை எனத் தெரிகிறது.

வடக்கு மாகாணத்துக்கான ஆசனப் பங்கீடுகள் பெரும்பாலும் இணக்கத்துடன் முடிந்த நிலையில், கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாநகர சபை யாருக்கு என்பதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் ரெலோவும் விடாப்பிடியாக நிற்கின்றன. இதனாலேயே ஆசன பங்கீட்டில் முடிவு எட்ட முடியாது உள்ளதாகப் பேசவல்ல தரப்புகள் தெரிவித்தன.

எனினும் நேற்றைய கூட்டத்தில், தேர்தலில் போட்டியிடுபவர்கள் தொடர்பிலேயே அதிகம் பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இம்முறை வட்டார முறைத் தேர்தல் என்பதால், மக்களிடம் செல்வாக்குப் பெற்ற நபர்களை தெரிந்து அவர்கள் தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டு இறுதி செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது.

ரெலோ கட்சியின் மத்திய குழுக் கூட்டம் காரணமாக பேச்சு இரவு 7 மணியளவில் முடிவுக்கு வந்தது. ஆசனப் பங்கீடு குறித்து இறுதி முடிவு எட்டப்படாததால் இன்றும் நாளையும் மீண்டும் தலைவர்கள் கூடி ஆசனப் பங்கீடு குறித்துப் பேசுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ச)

**இடரை...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் யாழ். அரச அதிபர் நா. வேதநாயகன் தலைமையில் இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள தீவக வலயங்கள் மற்றும் கடலோரபகுதி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் தொடர்பில் இதன்போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், சூறாவளி அல்லது வெள்ள இடர் ஏற்படும் பட்சத்தில் அதற்கு முகம்கொடுக்க முப்படையினர் மற்றும் பொலிஸாரின் உதவிகளை வழங்க உரிய அதிகாரிகள் உத்தரவாதம் வழங்கினார். அத்துடன் மீனவர்களை மறு அறிவித்தல்வரை கடலுக்குள் செல்ல வேண்டாம் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அதை சகல மீனவர்களுக்கும் தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அரச அதிபர் கடற்றொழில் நீரியல்வள அதிகாரிகளைப் பணித்தார்.

உலர் உணவு, மருத்துவம், சுகாதாரம், போக்குவரத்து, என சகல அத்தியாவசியத் துறை சார்ந்த அதிகாரிகளையும் எந்த நேரமும் விழிப்பாக இருக்குமாறும் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரதி பணிப்பாளர் ரவி சங்கரப்பிள்ளை, மாவட்ட மேலதிக அரச அதிபர் சுகுணவதி தெய்வேந்திரம் மற்றும் முப்படையினர், பிரதேச செயலாளர்கள் துறை சார் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

**லலித் ஜெயசிங்கவுக்கு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு லலித் ஜெயசிங்க சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளின் கடும் ஆட்சேபனை தெரிவித்தனர். எனினும் அவர்களுக்கு விளக்கம் வழங்கிய நீதிவான் ஏ.எம். எம்.றியாட் பிரதிப் பொலிஸ் மா அதிபர் என்.எல்.பெரேரா சாட்சியமளிக்க அனுமதித்தார்.

சுவிஸ் குமார் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டது தொடர்பான வழக்கு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் நடக்கிறது. நேற்றைய தவணையின்போது முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜெயசிங்க மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் ஆகியோருக்கு எதிரான வழக்கு நீதிவான் ஏ.எம்.எம்.றியாட் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கின் முதலாவது சந்தேகநபர் லலித் ஜெயசிங்க தனது சட்டத்தரணிகளுடன் மன்றில் முன்னிலையானார். இரண்டாவது சந்தேகநபரான யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் மன்றில் முன்னிலையாகவில்லை. அவர் தொடர்ந்து தலைமறைவாக உள்ளார் என குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மன்றில் தெரிவித்தனர். இந்த வழக்குத் தொடர்பில் சாட்சிகளாகக் குறிப்பிடப்பட்ட இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உள்ளிட்டோரிடம் பெறப்பட்ட வாக்குமூலங்கள் அடங்கிய அறிக்கை குற்றப்புலனாய்வுப்பிரிவினரால்மன்றில்முன்வைக்கப்பட்டது.

முதலாவது சந்தேகநபரான வடக்கு மாகாண முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜெயசிங்கவுக்கு கீழ் பணியாற்றிய யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் என்.எல். பெரேரா, இந்த வழக்கின் சந்தேக நபர்களுக்கும் எதிராகச் சாட்சியமளிக்கத் தானாக முன்வந்துள்ளார் என நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் அவர் நேற்று மன்றுக்கு வருகை தந்திருந்தார். அவரின் சாட்சியம் பதிவதற்கு வசதியாக சாவகச்சேரி நீதிவான்மன்றத்தின் உரைபெயர்ப்பாளர், ஊர்காவற்றுறை நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

எனினும் சாட்சியமளிப்பதாக முன்வரும் சாட்சியை நீதிவான் நீதிமன்றம் அனுமதிக்க முடியாது. அவர் தானாகவே சாட்சியமளிக்க முன்வந்தார் என்பதை எவ்வாறு உறுதிப்படுத்துவது? என சந்தேகநபர் லலித் ஜெயசிங்கவின் சட்டத்தரணிகள் ஆட்சேபனை தெரிவித்தார். "சாட்சியமளிக்க ஒருவர் முன்வந்தால் அவரது சாட்சியத்தை பதிவு செய்யவேண்டியது நீதிமன்றின் பொறுப்பு. அவ்வாறாகவே இந்த சாட்சியாளரையும் நீதிமன்றம் அனுமதியளிக்கிறது" என்று நீதிவான் சுட்டிக்காட்டினார். இந்த நிலையில் வழக்கு விசாரணைகள் எதிர்வரும் பெப்ரவரி 28ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.(ச)

**அஜித் குழு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற சந்தேகத்தில் நூறு வரையான இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

**முன்மொழிவு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண சபையின் 111 ஆவது அமர்வு நேற்று இடம்பெற்றது. இதன்போதே முதலமைச்சர் நியதிச் சட்ட அறிக்கையை முன்மொழிந்தார்.

இந்த முன்மொழிவின் பிரகாரம், 2018 ஆம் ஆண்டில் வடக்கு மாகாணத்துக்கு 2 ஆயிரத்து 675 கோடியே 40 இலட்சத்து 61 ஆயிரம் ரூபா வரை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், நிதியை செலவிடுவதற்கான எல்லைகள் தொடர்பிலும் முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பிலான விவாதங்கள் வரும் 12, 13, 14 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

**100 கி.மீ....** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் 100 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசும் எனவும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் திணைக்களம் எச்சரித்துள்ளது. வடக்கு கிழக்குக் கடல் பகுதி கடும் கொந்தளிப்புடன் காணப்படுமெனவும்,இன்று முதல் 8ஆம் திகதி வரை வடக்கு, கிழக்கு மற்றும் தெற்குக் கடல் பிரதேசங்களில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதனைத் தவிர்க்குமாறும் வளிமண்டவியல் திணைக்களம் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இந்தக் காற்ற ழுத்த நிலை பெரும் பாதிப்பை ஏற்படுத்துமென்றும், வங்காள விரிகுடா கடல் பிரதேசத்தில் காற்றின் வேகம் மணிக்கு 90 -100 கிலோ மீற்றர் வேகத்தில் வீசும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

**பொலிஸ்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உபபொலிஸ் பரிசோதகரைக் கைது செய்ய நேற்று செவ்வாய்க்கிழமை பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

யாழ். ஊர்காவற்றுறை நீதவான் எம்.எம்.றியால் முன்னிலையிலேயே குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த வழக்கில் முக்கிய சந்தேக நபரும், சம்பவம் இடம் பெற்றவேளை யாழ். பொலிஸ் பிரிவில் உப பொலிஸ் பரிசோதகராகக் கடமையாற்றித் தற்போது தலைமறைவாகவுள்ள சிறீகஜன் என்பவரைக் கைது செய்வதற்கான பிடியாணையை நீதிவான் பிறப்பித்தார்.

மேலும், அவர் தொடர்பான சகல ஆணவங்களையும் அடையாளத்துக்கு உட்படுத்தி, அவர் நாட்டை விட்டுத் தப்பிச் செல்ல முடியாதவாறு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திற்கும் அறிவித்தல் அனுப்புமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

**ஆதரவு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

40 இலட்சம் ரூபா எடுக்கப்பட்டது. இந்த நிதி சில வகைப்பாட்டினருக்கே வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் வழங்கப்பட்டது. இதற்கமைய 3 கோடியே 20 இலட்சம் ரூபா வழங்கப்பட் டது. இந்த நிதி செலவிடப்பட்டுள்ளதா? செலவிடப்பட்டிருந்தால் மாகாண சபையின் அனுமதி பெறப்பட்டதா? செலவிடப்படவில்லை என்றால் அது தொடர்பான தகவல்களை அடுத்த அமர்வில் மாகாண கூட்டுறவு அமைச்சர் வெளிப்படுத்த வேண்டும். இல்லையேல் 2018 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் கூட்டுறவுத் திணைக்களத்திற்கான ஒதுக்கீட்டை ஆதரிக்க மாட்டோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண சபையின் 111 ஆவது அமர்வு நேற்று இடம்பெற்றது. இதன்போதே சீ.வீ.கே. சிவஞானம் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ச)

**கசப்புணர்வு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளது."

இப்படி வடக்கின் கூட்டுறவு அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் நேற்றுத் தெரிவித்தார்.

கூட்டுறவாளர் வீரசிங்கத்தின் 125 ஆவது அகவை நினைவு தின நிகழ்வுகள் நேற்று யாழ். நகரின் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், வடக்கில் இடம்பெற்ற இன அழிப்புப் போரில் பல கோடி பெறுமதியான சொத்துக்கள் இழக்கப்பட்டன. இவை மீளப்பெறப்படவில்லை. இங்கு கூட்டுறவுத் திணைக்களத்தை மட்டும் குறிப்பிடவில்லை. இதனால் பல கூட்டுறவுச் சங்கங்கள் மூடப்படும் நிலையில் உள்ளன. போர்க் காலத்தில் கூட்டுறவுத் திணைக்களம் புரிந்த நன்மைகள் ஏராளம்.

தேசிய பிரச்சினையில் கூட்டுறவும் அழிக்கப்பட்டது. பொது நிதியை உருவாக்க முடியாதவர்களாக உள்ளனர். இவ்வாறான நிலையில் வடக்கில் கூட்டுறவை எவ்வாறு வளர்த்தெடுப்பது. இது தொடர்பில் மத்திய அமைச்சருடன் பேசியுள்ளேன். அடுத்த ஆண்டில் அதற்கான வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதாக அவர் வாக்களித்தார்.

பாதுகாப்புப் பிரச்சினையாலேயே நான் அரசியலுக்கு வந்தேன். இதனால்தான் நான் எதையும் துணிந்து பேசுகிறேன். என்னை வா... வா... என்று அரசியலுக்கு அழைத்தவர்கள் எனக்கு எதிராகவே சூழ்ச்சிகள் செய்கின்றனர். பல நெருக்குவாரங்களைத் தந்தனர். அப்போதெல்லாம் அரசியலை விட்டு ஒதுங்கிவிட நினைத்தேன். ஆனால் நான் வளர்ந்த இடம் எனக்கு அதற்கான வலிமையை தந்தது. மலையே வரினும் தலை சாயோம் எனத் துணிந்து நின்ற விடுதலைப் புலிகளின் போர்க் குணத்தில் நின்றவள் நான், என்னை எதுவும் செய்ய முடியாது - என்றார். (ச)


உங்கள் துயரில் பங்கெடுக்கவும், உறவுகளுக்கு அறிவிக்கவும்

- மரண அறிவித்தல்
- நினைவஞ்சலி
- கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

எதிரொலி Ethiroli

021 3004848

நிபந்தனை கனுக்குட்பட்டது


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வேண்டாம் இந்த விளையாட்டு



பரிஸ், டிசெ.06

இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலத்தை அமெரிக்கா ஒரு தலைபட்சமாக அறிவிக்கக்கூடும் என்பது குறித்து தான் கவலை கொண்டுள்ளதாக, பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மக்ரோன், அமெரிக்க அதிபர் டிரம்பிடம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து எந்த முடிவாக இருந்தாலும், இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்தின் பேச்சுவார்த்தையின் வரையறைக்குள்ளேயே இருக்க வேண்டும். இந்த விஷயத்தில் விளையாட வேண்டாம் என்றும் அவர் கூறியுள்ளார்.


இதற்கு முன்பாக, பல அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகளும் இதே எச்சரிக்கையை விடுத்துள்ளன.

இந்த வாரம், அமெரிக்க அதிபர் டிரம்ப், ஜெருசலத்தை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரிக்கலாம் என அறிக்கைகள் கூறுகின்றன.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் ஆகிய இரு நாடுகளும், ஜெருசலத்தை தங்களின் தலைநகரம் என்று உரிமை கோருகின்றன.

அமெரிக்க தூதரகத்தை டெல் அவிவில் இருந்து ஜெருசலத்துக்கு மாற்றுவதற்கு இருந்துவரும் ஆணைக்கு தடைவிதிக்கும் வகையில், அதிபர் டிரம்ப் கையெழுத்திடும் கோப்பில், இந்தமுறை அவர் கையெழுத்திட தவறலாம் என வெள்ளை மாளிகை தெரிவித்தது

1995இல், அமெரிக்க நாடாளுமன்றம் , இஸ்ரேலில் உள்ள தூதரகத்தை மாற்றியமைக்கவேண்டும் என சட்டம் கொண்டுவந்தது முதல், ஒவ்வொரு அமெரிக்க அதிபரும், அதைத் தள்ளுபடி செய்யும் வகையில் ஆறு மாதத்துக்கு ஒருமுறை, தள்ளுபடிப் பத்திரத்தில் கையெழுத்திடுவார்கள். அந்தப் பத்திரத்திலேயே டிரம்ப் இம்முறை கையொப்பம் இடாமல் விடுவதன் மூலம் ஜெருசலேத்தை அங்கீகரிக்கவுள்ளார். (இ)




# போர்ப் பயிற்சி ஆரம்பம்

நியூயோர்க், டிசெ.06

ஐ.நா. சபையின் எச்சரிக்கையை மீறி வடகொரியா அடுத்தடுத்து அணு ஆயுத, ஏவுகணைச்சோதனைகளை நடத்தி வருகிறது. இதைத் தொடர்ந்து வடகொரியாவின் அச்சுறுத்தல்களைச்சமாளிக்க அமெரிக்கா மற்றும் தென்கொரியாவின் முப்படைகளும் இணைந்து தனித்தனியாக போர்ப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

அந்த வரிசையில் இருநாட்டு விமானப் படைகளும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை போர்ப் பயிற்சியைத் தொடங்கின. ஒரு வாரம் நடைபெறும் இந்தப் பயிற்சியில் இருநாடுகளையும் சேர்ந்த ஏராளமான போர் விமானங்கள் பங்கேற்றுள்ளன. இதனிடையே அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மெக்மாஸ்டர் நிருபர்களிடம் கூறியபோது, வடகொரியாவுடனான போர் அபாயம் அதிகரித்து வருவதால் குறித்த அச்சுறுத்தலை எதிர்கொள்ள அமெரிக்கா வேகமாகச் செயற்பட்டு வருகிறது என்றார். (இ)

# ஜனாதிபதி மரணம் மர்மம் விலகியது



யேமன், டிசெ.06

யேமனின் முன்னாள் ஜனாதிபதி அலி அப்துல்லா சலா கிளர்ச்சியாளர்களினாலே கொல்லப்பட்டுள்ளதாக உத்தியோக பூர்வமாக நேற்று செவ்வாய்க்கிழமை அறிவிக்கப்பட்டது.

தலைநகர் சனாவில் முன்னாள் ஜனாதிபதி அலி அப்துல்லா சலா நேற்று முன்தினம் கொலையுண்டார். ஆனால் அவர் எவ்வாறு இறந்தார் என்பது குறித்து உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் பரவின. இராணுவத்தின் தாக்குதலில் எதிர்பாராதவிதமாகச் சிக்குண்டே அவர் மரணித்ததாக ஒரு தரப்பினரும், சிற்றூர்தியில் அவர் பயணித்த போதே தம்மால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக கிளர்ச்சியாளர்களும் தெரிவித்தனர். எனினும் அதனை உறுதிசெய்ய முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. இந்த நிலையில் கிளர்ச்சியாளர்களின் தாக்குதலிலேயே அவர் கொல்லப்பட்டார் என்று யேமன் அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்தது. (இ)

# சசிகபூர் காலமானார்



மும்பை, டிசெ.06

பழம்பெரும் ஹிந்தி நடிகர் சசி கபூர் உடல்நலக் குறைவால் மும்பையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலமானார்.

60 மற்றும் 70 ஆம் ஆண்டுகளில் ஹிந்தியில் மிகவும் பிரபலமாக விளங்கியவர் சசிகபூர். கொல்கத்தாவில் பிறந்த இவர் தனது குழந்தைப் பருவத்திலேயே சினிமாவில் நடிக்கத் தொடங்கி விட்டார். அவர் நடிகர் மட்டுமல்ல படங்களை இயக்குவதிலும், தயாரிப்பதிலும் ஈடுபட்டிருந்தார். 1961 முதல் இதுவரை 100க்கும் மேற்பட்ட ஹிந்திப் படங்களில் நடித்துள்ளார். 3 முறை தேசிய விருதுகள் வாங்கியுள்ளார், பிலிம்பேர் வாழ்நாள் சாதனையாளர் விருது மற்றும் பத்மபூஷன் விருது உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார். இவருக்குக் குணால் கபூர், கரண் கபூர் என இரு மகன்களும், சஞ்சனா கபூர் என்ற மகளும் உள்ளனர். இவரது மனைவி ஜெனிபர்கெண்டால் 1984 ஆம் ஆண்டு புற்று நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார். (இ)

# ஜெ. மறைந்து ஓராண்டு



சென்னை, டிசெ.06

முன்னாள் முதலமைச்சர் மறைந்த ஜெயலலிதாவின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தினை முன்னிட்டு மெரீனாவில் உள்ள ஜெயலலிதா நினைவிடத்தில் அ.தி.மு.க.வினர் நேற்று செவ்வாய்க்கிழமை அஞ்சலி செலுத்தினர்.

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா கடந்த வருடம் செப்ரெம்பரில் உடல் நலக் குறைவால் தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். தொடர்ந்து அவருக்குச் சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது.

எனினும், சிகிச்சை பலனின்றி டிசெம்பர் 5ஆம் திகதி அவர் மரணமடைந்தார்.

இந்த நிலையில் அவரது முதலாம் ஆண்டு நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இதனையடுத்து சென்னை மெரீனாவில் உள்ள அவரது நினைவிடத்தில் அ.தி.மு.க. தொண்டர்கள், நிர்வாகிகளுடன்பொது மக்களும் அஞ்சலி செலுத்தினர். (இ)

# டிரம்புக்கு பச்சைக்கொடி

வோஷிங்டன், டிசெ.06

டிரம்பின் 6 முஸ்லிம் நாடுகளுக்கான அமெரிக்கப் பயணத் தடை என்ற உத்தரவை முழு அளவில் செயற்படுத்த உச்ச நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை அனுமதி வழங்கியது.

அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின் டொனால்ட் டிரம்ப், அதிரடியாக அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார். சர்வதேச அளவில் தீவிரவாதம் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகப் பல நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகிறார்.

இந்த நிலையில், சத், ஈரான், லிபியா, சோமாலியா, சிரியா மற்றும் யேமன் ஆகிய 6 நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொள்ள டிரம்ப் கடந்த செப்ரெம்பரில் தடை விதித்தார். இந்த நாடுகளில் பெருமளவில் முஸ்லிம் மக்கள் வசித்து வருவதால், டிரம்பின் இந்த முடிவு முஸ்லிம் மக்களுக்கு எதிரானது எனப் பல்வேறு தரப்பிலிருந்தும் எதிர்ப்புக் கிளம்பியது. எனினும் அவர் தனது முடிவைச் செயற்படுத்துவதில் தீவிரமாகவிருந்தார். தற்போது டிரம்புக்கு நீதிமன்றமும் பச்சைக் கொடி காட்டியதால், அவர் உற்சாகத்தில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. (இ)


# சிவகார்த்தியின் ‘சீமராஜா’



சென்னை, டிசெ.06

பொன்ராம் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் - சமந்தா நடித்து வரும் புதிய படத்திற்கு ‘சீமராஜா’ எனத் தலைப்பிட்டுள்ளனர்.

‘வருத்தப்படாத வாலிபர் சங்கம்’, ‘ரஜினி முருகன்’ என சிவகார்த்திகேயனை வைத்துப் படங்களை வெளியிட்ட இயக்குனர் பொன்ராம் தற்போது, தனது மூன்றாவது படத்தையும் சிவகார்த்திகேயனை வைத்தே இயக்கி வருகிறார். (இ)



# உயிருடன் விமானிக்கு தீ

## ஐ.எஸ் வெளியிட்ட அடுத்த வீடியோ

சிரியா, டிசெ.06

சிரியா விமானப்படையின் விமானி ஒருவரை உயிருடன் எரித்துக் கொல்லும் வீடியோவை ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்கள் இணையத்தளத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிட்டனர்.

சிரியா விமானப்படை விமானியான அஸ்ஸாம் ஈத், கடந்த 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஐ.எஸ். தீவிரவாதிகளால் கடத்தப்பட்டார்.

சிரிய அரபு விமானப்படை மிக் -23 என்ற இந்த விமானத்தை ஐ.எஸ். தீவிரவாதிகள் குறிவைத்துத் தாக்கியதில், அது கீழே விழுந்தது. அந்த விமானத்தில் இருந்த விமானியை இவர்கள் கடத்திச் சென்று, சுமார், 18 மாதங்கள் கடந்தும் விமானி குறித்த தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

இந்த நிலையில், ஐ.எஸ். தீவிரவாதிகள் வெளியிட்டுள்ள வீடியோவில், ஒரேஞ்ச் நிறத்தில் ஆடை அணிந்துள்ள விமானியின் தலை மொட்டையடிக்கப்பட்டுள்ளது. அவரது கழுத்தில் கம்பி போட்டு இறுக்கிக் கட்டப்பட்டுள்ளது, அவரது பின்னால் நிற்கும் தீவிரவாதி விமானியை இறுகப் பிடித்துக் கொண்டுள்ளார். அதன்பின்னர் விமானியை உயிருடன் தீ வைத்து எரித்துக் கொல்கின்றனர். இந்த வீடியோ எப்போது எடுக்கப்பட்டது என்பது குறித்த தகவல்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. மேலும் வீடியோவின் இறுதியில் சிரியா மற்றும் ஈராக்கில் ஐ.எஸ் தீவிரவாதிகளின் பழைய காட்சிகளும் இணைக்கப்பட்டுள்ளன. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் சரிவு



புதுடெல்லி, டிசெ.06

இலங்கை, இந்திய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், டெல்லியில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமான மூன்றாவது டெஸ்டின் நேற்றைய நான்காவது நாள் முடிவில் இலங்கையணி தடுமாறி வருகிறது.

தமது முதலாவது இன்னிங்ஸில், 9 விக்கெட் இழப்புக்கு 356 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய ஆட்டத்தை ஆரம்பித்த இலங்கையணி, 373 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில், அணித்தலைவர் தினேஷ் சண்டிமால் 164, அஞ்சலோ மத்தியூஸ் 111, டில்ருவான்பெரேரா 42, சதீர சமரவிக்கிரம 33 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், ரவிச்சந்திரன் அஷ்வின், இஷாந்த் ஷர்மா ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், ரவீந்திர ஜடேஜா, மொஹமட் ஷமி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

முதலாவது இன்னிங்ஸ் மூலம் பெற்ற 163 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடியது இந்திய அணி 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் 246 ஓட்டங்களைப் பெற்றபோது ஆட்டத்தை இடைநிறுத்தி, 410 ஓட்டங்களை இலங்கையணிக்கு வெற்றியிலக்காக நிர்ணயித்தது.

துடுப்பாட்டத்தில், ஷிகர் தவான் 67, ரோகித் ஷர்மா ஆட்டமிழக்காமல் 50, அணித்தலைவர் விராட் கோஹ்லி 50,

புஜாரா 49 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், லஹிரு கமகே, சுரங்க லக்மால், டில்ருவான் பெரேரா, லக்ஷன் சந்தகான், தனய டி சில்வா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

அதன் பின்னர் தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் இலங்கையணி, நான்காவது நாள் ஆட்டம் போதிய வெளிச்சமின்மை காரணமாக முடிவுக்கு வரும்போது 31 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்திருந்தது. தற்போது தனஞ்சய டி சில்வா 13 ஓட்டங்களுடனும் அஞ்சலோ மத்தியூஸ் ஓட்டமெதனையும் பெறாமலும் களத்திலுள்ளனர். (அ)

# உயர்கிறது சம்பளம் கோஹ்லிக்கு 12 கோடி



புதுடெல்லி, டிசெ.06

இந்திய கிரிக்கெட் அணி வீரர்களின் சம்பளம் 6 மடங்குவரை உயரக்கூடும் என இந்திய கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதன்படி இந்திய அணித்தலைவர் விராட் கோஹ்லிக்கு சம்பளமாக 12 கோடி ரூபாவுக்கும் அதிகமாக ஒவ்வொரு வருடமும் கிடைக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது.

இந்திய கிரிக்கெட் வீரர்களின் சம்பளத்தை உயர்த்தும்படி விராட் கோஹ்லி, டோனி, பயிற்சியாளர் ரவி சாஸ்திரி ஆகியோர் இந்திய கிரிக்கெட் சபையின் நிர்வாகக்குழுத் தலைவர் வினோத் ராயை சமீபத்தில் சந்தித்தபோது கோரிக்கை வைத்தனர்.

அப்போது அவுஸ்திரேலியா, இங்கிலாந்து வீரர்களுக்கு இணையாக சம்பளம் வழங்க வேண்டும் எனவும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்டீவ் ஸ்மித் ஆண்டு வருமானமாக சுமார் 12 கோடி ரூபா பெற்று வருகிறார். இங்கிலாந்து கேப்டன் ஜோ ரூட் அதற்கு சமமான அளவில் ஊதியம் பெறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

சுமார் 4 மணி நேரம் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் முடிவில் இந்திய கிரிக்கெட் சபையின் நிர்வாகக்குழு, வீரர்களின் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும் என்பதை ஏகமனதாக ஏற்றுக்கொண்டதாகக் கூறப்படுகிறது. (அ)

# வீரர்கள் அலைக்கழிப்பு



கொழும்பு, டிசெ.06

வெளிநாட்டுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொள்வதற்காக விமான நிலையத்திற்கு சென்ற வீரர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை திருப்பி அழைக்கப்பட்டு, பின்னர் மீளவும் அனுப்பப்பட்டனர்.

இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் தொடர் கிரிக்கெட் போட்டியில் பங்கு பெறவிருந்த இலங்கை ஒருநாள் அணியின் வீரர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்றனர். எனினும் விமான நிலையத்துக்குச் சென்ற வீரர்களை மீண்டும் வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

ஒருநாள் கிரிக்கெட் அணிக்கு விளையாட்டுத்துறை அமைச்சின் அனுமதி கிடைக்காமையினாலேயே அவர்கள் திருப்பி அழைக்கப்பட்டனர்.

கிரிக்கெட் சட்டத்திற்கமைய அதற்கான சங்கங்களின் தெரிவுக் குழுவினால் விளையாட்டுத் துறை அமைச்சில் அனுமதி பெற்றுகொள்வது அவசியமாகும். அதற்கமைய ஒரு நாள் அணிக்கு அவ்வாறு அனுமதி பெற்றுக் கொள்வதற்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனம் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

ஒருநாள் அணியின் விபரம் தன்னிடம் தெரிவிக்கப்படவில்லை என விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இதனாலேயே அவர்கள் திருப்பி அழைக்கப்பட்டிருந்தனர்.

திசர பெரேரா (தலைவர்), உப்புல் தரங்க, தனுஷ்க குணதிலக்க, அசேல குணரத்ன, சதுரங்க டி சில்வா, சசித் பத்திரண, அகில தனஞ்சய, துஷ்மந்த சமீர, நுவன் பிரதிப் ஆகிய வீரர்களே இவ்வாறு அமைச்சினால் அலைக்கழிக்கப்பட்ட வீரர்களாவர். (அ)

# வெற்றியா? தோல்வியா? பரபரப்பில் ஆஷஸ்

அடிலெய்ட், டிசெ.06

அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்து டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் தொடரில், அடிலெய்டில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமான இரண்டாவது டெஸ்டின் நேற்றைய நான்காவது நாள் ஆட்ட முடிவில், வெற்றிக்காக இங்கிலாந்து போராடி வருகிறது. தமது இரண்டாவது இன்னிங்ஸில், 4 விக்கெட் இழப்புக்கு 53 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் நான்காம் நாள் ஆட்டத்தை ஆரம்பித்த அவுஸ்திரேலியா இங்கிலாந்தின் வேகப்பந்தில் ஆட்டம் கண்டது. 138 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்த அவுஸ்திரேலியா அணி, இங்கிலாந்துக்கு வெற்றியிலக்காக 354 ஓட்டங்களை நிர்ணயித்தது. இங்கிலாந்து அணி சார்பாக, ஜேம்ஸ் அன்டர்சன் 5, கிறிஸ் வோக்ஸ் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இந்நிலையில், தமது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இங்கிலாந்து, நான்காம் நாள் ஆட்ட முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 176 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. (அ)



# நாமலுடன் யுவராஜ்

கொழும்பு, டிசெ.06

இந்தியக் கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங்கை, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச கொழும்பில் நேற்றுச் சந்தித்துள்ளார்.

இது குறித்த புகைப்படம் ஒன்றைத் தனது ருவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச, யுவராஜ் சிங் குறித்து சில பதிவுகளையும்விடுத்துள்ளார்.

அந்த ருவிட்டர் பதிவில், “சந்தேகத்துக்கு இடமின்றி யுவராஜ் சிங் ஒரு பெரிய விளையாட்டு வீரர் அத்துடன் சிறந்த மனிதாபிமானமுடையவர்” என நாமல் ராஜபக்சதனது பதிவில் கூறியுள்ளார். (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 06.12.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.